# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1757/3 - 2012 මැයි 09 වැනි බදාදා - 2012.05.09

*1757/3 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிலுள்ள தத்துவங்களின் பிரகாரம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கேற்ப, நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-

(1) கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் அவை இறக்குமதி செய்யப்படும் போது துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு செலுத்தப்படுவதனை விட்டும் விலக்களிக்கப்படுவதாகப் பிரகடனப்படுத்துகிறேன்.

I. ஏதும் கருத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துகின்ற தொழில் முயற்சி ஒன்றினால், அக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற காலப்பகுதியினுள் ,1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டு சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை முதலீட்டு சபையுடன் அக்கருத்திட்டம் மற்றும் அதன் குறிக்கோள்கள் குறித்துரைக்கப்பட்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாகவும், அக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியினுள் இலங்கை முதலீட்டு சபையினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் பூரணப்படுத்தியதும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தில் வரி பிற்போடலுக்கு தகுதியானதும், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின் பிரிவு 16ஈ இன் கீழ் அல்லது பிரிவு 17 அ இன் கீழ் வரி விடுவிப்பிற்கு தகுதியானதுமானதுமான அத்தகைய தொழில் முயற்சி ஒன்றினால் அவற்றின் பாவனைக்காக பொறித்தொகுதி அல்லது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன இறக்குமதி செய்யப்படும் போது,

II. ஏதும் கட்டுமானச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சி ஒன்றினால், அக் கட்டுமான செயற்பாட்டிற்குத் தேவையாள ஏதும் பொருட்கள் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்ய முடியாது என அறிவிக்கப்பட்ட, இலங்கை முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் பொதுத் திறைசேறி செயலாளரின் எதிர் மறையான நிரலில் அடங்கும் பொருட் பட்டியலினுள் உள்ளடக்கப்படாத ஏதும் தொழில் முயற்சி ஒன்றினால் முன்னெடுக்கப்படுகின்ற கட்டுமானக் கருத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியினுள், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு, இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஏதும் தொழில் முயற்சி ஒன்றினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கைக்கு அமைய, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின் 17 இ பிரிவின் கீழ் வரி பிற்போடலுக்கு தகுதியான நிர்மாணச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு கருத்திட்டம், பொறித்தொகுதி அல்லது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தவிர்ந்த கருத்திட்டத்திற்குத் தேவையான பொருட்கள் இறக்குமதியின் போது,

III. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா விமான நிறுவனம், ஸ்ரீ லங்கன் கேட்டறிங் தனியார் நிறுவனம் மற்றும் மிஹின் லங்கா தனியார் நிறுவனம் என்பனவற்றால் சர்வதேச தரத்தில் போக்குவரத்துச் சேவையினை மேம்படுத்துவதற்குத் தேவையான (மோட்டார் வாகனங்கள் மற்றும் தனியார் பாவனைக்கான பொருட்கள் தவிர்த்து) பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற போது.

(2) 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 1582/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக வெளியிடப்பட்ட கட்டளையின் I ஆம் பிரிவிலுள்ள அட்டவணையின் நிரல் I இலுள்ள தலைப்பு இலக்கம் 29.00 இன் கீழ் குறிப்பிடப்படும் ஒவ்வொரு பொருட்களுக்கும், அந்த அட்டவணையின் நேரொத்த நிரல் III இலுள்ள விபரத்தினை கீழ் குறிப்பிடப்படுவதனைப் போன்று திருத்தியமைக்கிறேன்.

**அட்டவணை**

| இயைபு முறை பட்டியற் தலைப்பு இல.<br>I | இயைபு முறை வகைக் குறியீடு<br>II | விபரம்<br>III | சலுகை விகிதம்<br>IV |
|---|---|---|---|
| 29.00 | | சேதன இரசாயன பொருட்கள்<br>* குறித்த அரச நிறுவனத்தின் அங்கீகாரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துப் பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் | 2% |

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2012, ஏப்பிறல் 30.

5- 573

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.